முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1250

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.03.2023, வியாழக்கிழமை

1. ஓங்கார ஞானியே ஆறுமுக அரங்கா
   ஓங்காரக்குடில் படைத்த ஞான தேசிகா
   ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே உமக்கு
   ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
2. ஆசியதும் அரங்கன் தாள்பணிந்து உலகோர்
   அறத்தினை தொடர்ந்து செய்துவர
   வாசிவெல்லும் யோகமும் ஞானமும்
   வடிவேலன் என் அருளும் கண்டும் தேறுவர்
3. தேறவே அரங்கன் காட்டு மார்க்கமே
   தெய்வீகத்தை பரிபூரணமாய் அருளும் ஞானமார்க்கம்
   மறுக்காது உலகோர் தொடர்ந்து ஏற்று
   மாதவசியின் வழியில் பின்பற்றிவர
4. வருகவே உலகோர்க்கு ஞான சித்தி
   வையத்தைக் காக்கின்ற மாகாசக்தியும்
   ஆறுமுக அரங்கன் மூலம் வரமாக
   அழியாமையாக பெற்று சிறக்க நேரும்
5. நேர்மை கொண்டு அரங்கன்வழி உலகோர் வர
   நிலவுலகில் சித்திபல கண்டடைந்து
   வறுமைவென்று உலகமெங்கிலும்
   வாட்டுகின்ற பசிபிணியை விரட்டி இனிதே
6. இனிதே இயற்கை வளம் பலமோடு
   இடரென்பதே இந்த உலகுக்கு எந்த வகையும் அனுகாது
   கனிவேலவன் தயவாக சர்வபலமாக
   கலியுகம் காப்பு பெற வகைகிட்டும்
7. கிட்டவே அரங்கன் வழி இந்த அற்புதம்
   குறைவின்றி இவ்வுலகம் கண்டடையும்
   தட்டாது ஓங்காரக்குடில் நோக்கி உலகோர்
   தடையற தொடர்ந்துவர அற்புதம் நிகழும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–